திரு. ஜே. மாதா கவுடர் : இந்தத் திட்டம் முடிந்த பிறகு நம்முடைய ராஜ்யத்திற்கு எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 400 மெகாவாட்.

திரு. வை. சங்கரன் : இதற்கு உத்தேசமாக என்ன காஸ்ட் ஆகும் என்று தெரிவிக்கமுடியுமா ? இது முடிவுபெறுவதற்கு இன்னும் எத்தனை காலம் பிடிக்கும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : காஸ்ட் 60 கோடியிலிருந்து 65 கோடி ரூபாய் வரையிலும் ஆகும். ஒரு அணுசக்தி மின்சார நிலையத்தை ஏற்படுத்துவதற்கு 4, 5 வருஷங்களாவது ஆகும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்தத் திட்டம் மத்திய சர்க்காருடைய திட்டமாக இருந்தாலும் இந்த மாநிலத்திற்கு இது மிகவும் முக்கியம் என்பதை வற்புறுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ய ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு அவசியமே ஏற்படவில்லை. அதற்குவேண்டிய நிதி எல்லாம் மத்திய சர்க்காரால் பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எல்லாம் நம்முடைய நிதியிலிருந்தே செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : கல்பாக்கம் அணுசக்தி மின்சார நிலையத்தின் மூலமாக 400 மெகாவாட் மின்சார சக்தி கிடைக்குமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது போதாத காரணத்தால் தூத்துக்குடி மின்சார நிலையத்தையும் துரிதப் படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தூத்துக்குடி மின்சார நிலையம் சம்பந்தமாகப் போதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. வை. சங்கரன் : இந்தத் திட்டம் முடிந்தவுடனே ப்ரொட்யூஸ் ஆகும் கரண்ட் விலைக்குக் கொடுக்கப்படுமா ? இது என்ன முறையில் கொடுக்கப்படும் ? பங்கிடு முறையில் நம்முடைய ராஜ்யத்திற்கும் மற்ற ராஜ்யங்களுக்கும் ஒதுக்கவேண்டியிருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரிப் பிரச்னைக்கு இப்பொழுது இடமில்லை.

அணு ஆராய்ச்சி நிலையம்

* 188 **கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவில் அணு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது உண்மையா?

7th March 1966]

(இ) ஆம் என்றால், அதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்ய இம்மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

(உ) இத்திட்டத்தின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) A suitable site has been selected in the Fairlawn area. The matter is under correspondence with the Atomic Energy Commission, Government of India.

(c) The details have not yet been finalised.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், இந்த அணு ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கும் நிலையிலே நம்முடைய நாட்டிற்கு அடிக்கடி ஏற்படும் ஆபத்துக்களை அரசாங்கம் கவனத்தில் கொண்டு அணு குண்டு தயாரிப்பதற்கும் மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது மத்திய சர்க்காருடைய பொறுப்பு.

அனல் மின்சார நிலையம்

* 189 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காரைக்குடி பகுதியில் கிடைக்கும் நிலக்கரியை உபயோகப்படுத்தும் வகையில் அங்கு ஒரு அனல் மின்சார நிலையம் அமைக்கக் கோரி அண்மையில் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) காரைக்குடி பழுப்பு நிலக்கரிப்படிவங்கள் குறித்து மேற்கொண்ட தொடக்க ஆராய்ச்சிகளின் முடிவு ஊக்கமளிப்பதாக இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியின் முடிவு ஊக்கம் அளிப்பதாக இல்லையென்று அமைச்சர் கூறினார்கள். அதற்குள்ள விவரங்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாம் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் போதுமான அளவு லிக்னைட், பழுப்பு நிலக்கரி இல்லை. நல்ல கனமான ஸீம்ஸ் இருந்தால்தான் நாம் பயன்படுத்த முடியும். குறைவான சத்துடையதாகத்தான் இருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இப்பொழுது அங்கே கிடைக்க இருக்கும் பழுப்பு நிலக்கரியைக்கொண்டு வேறு என்ன ஊக்கமளிக்கக்கூடிய தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்று உத்தேசம் இருக்கிறது ?